# 5

## வெற்றிகரமான திருமணத்திற்கான வழிவகை ...

# உங்கள் துணையாளியின் தேவைகளை நிறைவேற்றுதல்

*நீங்கள் திருமணம் செய்துகொள்ளும்போது, ஒண்டிக்கார வாழ்வை நீங்கள் கைவிடுகிறீர்கள். இனிவரும் ஆயுட்கால முழுவதற்கும் உங்களை இன்னொரு நபரிடம் நீங்கள் ஒப்படைக்கிறீர்கள். அதாவது அந்த நபரின் நலனுக்கு நீங்கள் பொறுப்பேற்கிறீர்கள்[1]. உங்களது திருமணமென்பது உங்களது தேவைகளை மட்டுமே நிறைவேற்றிக்கொள்வதற்காக அல்ல; உங்களது வாழ்க்கைத் துணையின் தேவைகளையும்கூட நிறைவேற்றுவதற்காகத்தான்.*

*உண்மையிலேயே உங்கள் துணையாளியின் தேவைகளை நிறைவேற்றுவதுதான் அன்பின் சாராம்சம். வேதம் விரும்புகின்ற வகையிலான அன்பினால் நீங்கள் ஒருவரை உண்மையாய் நேசிப்பீர்களேயானால் அந்த நபரின் நல்வாழ்வுதான் உங்களது முக்கிய அக்கறையாயிருக்கும். உங்களது கணவனையோ அல்லது மனைவியையோ கிறிஸ்தவ அன்பினால் நேசிக்கும் பொழுது வேறு எதைக்காட்டிலும், அவரது அல்லது அவளது தேவைகள் நிறைவேற்றப்படுவதையே அதிகமாய் விரும்புவீர்கள்.*

*உங்கள் துணையாளியின் தேவைகள் என்ன?[2]*

## சரீரப்பிரகாரமான தேவைகள்

*உங்கள் துணையாளிக்கு சரீரப்பிரகாரமான தேவைகள் இருப்பது தெரிந்ததே. உங்களிருவருக்குமே உணவு, உடை, இருப்பிடம், ஆகியவை தேவைப்படுகிறது. புதிய ஏற்பாட்டிலே, குடும்பத்தின் சரீரப்பிரகாரமான தேவைகளுக்கு வழிவகை ஏற்பாடு செய்யும் விசேஷித்த பொறுப்பு கணவனுக்கு அளிக்கப்படுகிறது (1 தீமோத்தேயு 5:8). அந்தப் பொறுப்பினை அவன் கருத்தோடு ஏற்றுக்கொள்ள வேண்டும். அவன் சோம்பேறியாகவோ, வேண்டும் என்றே வேலையைத் தவிர்ப்பவனாகவோ அல்லது ஒரு வேலையைத் தக்கவைத்துக் கொள்ள தவறுபவனாகவோ இருக்கமுடியாது. சில சமயங்களில் குடும்பத்தின் நலனுக்காக தனது சொந்தக் கனவுகளை நிறைவேற்றுவதை ஒத்திப்போட வேண்டிய நிலை வரலாம். வீட்டை நடத்துகின்ற, அதனை நல்ல விதத்தில் பராமரிக்கின்ற பொறுப்பு மனைவிக்கு அளிக்கப்பட்டிருக்கிறது (1 தீமோத்தேயு 5:14; தீத்து 2:5), இதன் மூலம் குடும்பத்தினர் சரீரபிரகாரமாக (உணர்வு பூரணமாகவும்) நன்றாயிருப்பதற்கு பங்காற்றலாம். அத்தோடு, ஒவ்வொருவருமே மற்றவருடைய ஆரோக்கியத்தைக் குறித்து அக்கறையுள்ளவர்களாயிருக்க வேண்டும். தனக்கு வியாதி வந்தால் எப்படியிருக்குமோ அதே விதமான கவலை மனைவியின் வியாதிமீது கணவனுக்கு இருந்திட வேண்டும், அதுபோலவே மனைவிக்கும் இருந்திட வேண்டும். உடல் ரீதியாக அவளோ அல்லது அவனோ தன்னை கவனித்து*

கொள்வதற்கு ஒருவருக்கொருவர் ஒத்தாசை புரிந்திட வேண்டும்.

திருமணத்தில் நிறைவேற்றப்பட வேண்டிய தேவைகளில் பாலுறவு தேவைகளும் உண்டு. திருமணப் பங்காளிகள் இருவருமே பரஸ்பரம் ஒருவர் மற்றொருவரது பாலியல் தேவைகளைத் திருப்திப்படுத்துகிற கடமையை ஏற்றுக்கொள்ள வேண்டும் (1 கொரிந்தியர் 7:3-5).

## சமூகத் தேவைகள்

அதோடு, திருமணப் பங்காளிகள் ஒருவருக்கொருவர் நிறைவேற்றி உதவிடக்கூடிய சமூகத்தேவைகளும் உள்ளன. தங்களுக்கு உதவி செய்து ஊக்கமளித்திடக்கூடிய சகமனிதர்களடங்கிய ஒரு சமூக வட்டத்தின் சமூகப்பின்னலின் ஒரு அங்கமாயிருப்பதற்கு ஒவ்வொருவருக்கும், தோழமையும் நட்புறவும் தேவைப்படுகிறது.

கணவனும் மனைவியும் பரஸ்பரம் ஒருவர் மற்றவரது மிகச் சிறந்த நண்பர்களாகவும், மிகவும் நெருக்கமான தோழர்களாகவும் இருக்க வேண்டுமென்பது உண்மையே. ஆண் தனியே இருத்தலாகாது என்பதற்காகவே தேவன் பெண்ணைப் படைத்தார். இருந்தபோதிலும், வாழ்க்கைத் துணையுடன் ஒருவருக்குள்ள நட்புறவு என்பது எல்லாவித சமூக தேவைகளையும் பூர்த்தி செய்ய இயலாததாயிருக்கலாம்.[3] சிநேகிதிகளின் சூழல் தனக்கு தேவை என்கிற உணர்வு ஓர் பெண்ணுக்கு ஏற்படலாம்; மீன்பிடிக்க அல்லது வேட்டையாட அல்லது விளையாட்டு நிகழ்சிகளில் இன்புற்றிருக்க அல்லது தன்னைப் போன்ற ரசனையுள்ளவர்களோடு கலந்துரையாடிட அவ்வப்போது மற்ற ஆண்களோடிருப்பதற்கு ஓர் ஆண் விருப்பப்படலாம். கணவனும் மனைவியும் ஒருவர் மற்றவரது தேவைகளைப் புரிந்து கொள்ள வேண்டும். தனது துணைவர் வாழ்வில் தமக்கு இணையான பணிகளுள்ளவர்களோடு நேரம் செலவிட நினைக்கும்போது அவர் தன்னை ஒதுக்கித் தள்ளுவதாக எண்ணிவிடக்கூடாது. இந்த தேவைகளை நிறைவேற்றிக் கொள்வதற்கு தம்பதியர் ஒருவருக்கொருவர் ஊக்கமளிக்க வேண்டும். ஓர் ஆணுக்கும் அவரது மனைவிக்கும் இடையே எந்த விதமான நண்பர் கூட்டமும் வந்துவிடக்கூடாது என்பது நியாயமே. ஒருவரது பாச உணர்வுகளிலும், நேரம் ஒதுக்குவதிலும், எப்போதுமே வாழ்க்கைத் துணைக்கு முன்னுரிமை அளிக்கப்பட வேண்டும்.

## உணர்வு பூர்வமான அல்லது மனோ ரீதியான தேவைகள்

மேலும், கணவனும் மனைவியும் ஒருவர் இன்னொருவரது உணர்வுப் பூர்வமான மற்றும் மனோ ரீதியான தேவைகளை நிறைவேற்றுவதில் அக்கரையுள்ளவர்களாயிருக்க வேண்டும்.

### ஆண்களும் பெண்களும் பகிர்ந்து கொள்ளும் தேவைகள்

ஆணுக்கும் பெண்ணுக்கும் ஒரே விதமான உணர்வு பூர்வமான அல்லது மனோ ரீதியான தேவைகள் உண்டு. ஆனால் அந்தத் தேவைகள் ஒரே விதமான வகையில் திருப்தியடையாமலிருக்கலாம். இருவருமே நேசிக்கப்படுதலை உணர்ந்திடவும், பாராட்டப்படவும், மதிக்கப்படவும்

வேண்டியவர்கள். இருவருமே தாங்கள் சாமர்த்தியமிக்கவர்களென்றும், பிரயோஜனமானவர்களென்றும் தங்களைக்கருதிட வேண்டும். சமூகத்திற்கும் குடும்பத்திற்கும் விலைமதிப்புள்ளதோர் தொண்டினை செய்து வருகிறோம் என அவர்கள் நம்பிட வேண்டும். மக்களனைவருமே, பயனுள்ள ஏதாவதொன்றை சாதிப்பதன் மூலம் தங்களது திறமையை நிறைவேற்றிடவும், தங்களுடைய வாழ்க்கை அர்த்தமுள்ளதாயிருக்கிறது என்பதனை அறிந்து கொள்ளவும் விரும்புகிறார்கள். ஆண்களும் பெண்களுமாகிய எல்லாருமே தங்களுக்கு ஒரு சமூக அடையாளத்தைத் தருவதற்கு உதவிகரமாயிருக்கும் - ஒரு குடும்பம், ஒரு சபை, ஓர் பணிக்குழு, ஓர் சமூக அல்லது அரசியல் ஸ்தாபனம், ஒரு சங்கம், இனவாரியான அல்லது தேசிய அளவிலானதோர் குழு போன்ற ஏதாவதொரு கூட்டத்தாரின் அங்கத்தினர் என்ற அந்தஸ்தைப் பெற விரும்புகிறார்கள். குறைந்த அளவிலோ அல்லது அதிக அளவிலோ, எல்லாருமே சகமனிதரின் அங்கீகரிப்பையும், எதிர்காலத்திற்குரிய பாதுகாப்பு உணர்வையுமே விரும்புகிறார்கள்.

ஆயினும், ஆண்களும் பெண்களும் வேறுபடுகின்றபடியால், திருமணப் பங்காளிகளில் ஒருவர் இன்னொருவரது உணர்ச்சிகளை உணர்ந்து கொள்ளக் கூடியவர்களாயிருக்க வேண்டும். உங்களது வாழ்க்கைத்துணையின் நிலையில் உங்களை நிறுத்திப்பார்க்க முயலுங்கள். "இதைப்பற்றி எனது துணைவியின் உணர்வு எவ்விதமிருக்கும்?" என கேட்டுக் கொள்ளுங்கள்.

உதாரணத்திற்கு, வழக்கமாக ஆண்களுக்கு சுயமதிப்பின் உணர்வைக் கொடுப்பது அவர்களது உத்தியோகம்தான்; ஒரு ஆணின் தொழில் மோசமடைந்தால், அல்லது தனது வேலையை இழந்துவிட்டால், அவன் மனச்சோர்வடைந்து, தான் உபயோகமற்றவன் என எண்ண நேரிடலாம். (அப்போது அவருடன் வாழ்வது சந்தோஷமற்றதாயிருக்கலாம்.) அத்தகைய சமயத்தில், அவரது மனைவியானவள் புரிந்து கொள்பவளாகவும், உற்சாகப்படுத்துகிறவளாகவும் இருந்திட வேண்டும்.

இன்னொரு புறத்தில், பிள்ளைகளெல்லாரும் வளர்ந்துவிட்ட பிறகு ஓர் "காலி கூட்டின்" பாதிப்புகளைப் பெண்கள் உணரலாம். அவளது கணவன் அவளது தேவைகளைப் புரிந்து கொண்டு அவற்றை நிறைவேற்றிட முயலவேண்டும். அவள் பாராட்டுதலுக்குரியவள் என்பதை கணவன் தம் மனைவிக்கு தெரியப்படுத்த வேண்டும். இப்போது அவள் செய்து வருகின்றவைகள் எவ்வளவு முக்கியமானவை என்பதனை அவள் காண்பதற்கு உதவி செய்யவேண்டும்.

பிரத்தியேகமாக, கணவன் தனது மனைவியின் தேவைகளை உணருகிறவராயிருக்க வேண்டும். மனைவிமாரின் உணர்வுகள் என்னவென்பதை அறியாதவர்களாகவே இருப்பவர்கள் ஆண்கள் என்று அறியப்பட்டிருக்கிறார்கள், ஆண்கள் உண்மைகளைப் பற்றி மட்டுமே சிந்திக்கிற இயல்புடையவர்களாகவும், உணர்வுகளின்மீது தங்கள் மனைவிமார்கள் செலுத்தும் கவனத்தை அலட்சியமாய்ப் பார்க்கிறவர்களாகவும் இருக்கிறார்கள். *உணர்வுகள் உண்மைகளே* என்பதை ஆண்கள் புரிந்து கொள்ள வேண்டியது அவசியம்! மற்ற உண்மைகள் எதுவாயிருந்தாலும் மனைவியின் உணர்வு ஒரு விதமாயிருக்கும் என்பது *உண்மை*. அவளுடைய சந்தோஷத்திற்கும், அவர் *உண்மைகள்* என்று எதை மதிக்கிறரோ அதைவிட திருமணத்தின் நலனுக்கும், *அவளுடைய உணர்வுகள் அதிமுக்கியமானவையாக இருக்கலாம்*. ஒரு கிறிஸ்தவ கணவன்

என்பவர், தனது பணி எவ்வளவு கடினமாயிருந்த போதிலும் தனது மனைவியின் மனவெழுச்சிகளுக்கு தக்கவாறு செயல்பட கற்றுக்கொள்ள வேண்டும். கூடுமானவரை, தனது மனைவியை மகிழ்விக்க எதையெல்லாம் செய்யமுடியுமோ அதையெல்லாம் கணவன் செய்திட வேண்டும், அதுபோலவே தனது கணவன் மகிழ்ச்சியாய் இருப்பதற்கு மனைவி உறுதுணை புரிந்திட வேண்டும்.

**ஆண்கள் மற்றும் பெண்களின் குறிப்பிட்ட பிரத்தியேக தேவைகள்**

கணவன் மனைவி ஆகிய இருவருமே ஒருவர் மற்றொருவருக்கு நிறைவேற்றக் கூடிய கூடுதலான தேவைகளும் உண்டு. ஜேம்ஸ் பெய்ர்டு அவர்கள் ஒக்லஹோமா கிறிஸ்தவ கல்லுரியின் தலைவராயிருந்தபோது ஆஸ்திரேலியாவில் உள்ள சிட்னியில் சொற்பொழிவு நிகழ்ச்சியொன்றில் திருமணம் பற்றி விவரித்தார். அவர் குறிப்பிட்ட ஒரு கருத்தாவது,பெண்கள் வேறெதையும்விட நேசிக்கப்படுவதையே அதிகம் விரும்புவதாகவும் ஆண்கள் மற்ற எல்லாவற்றிற்கும் மேலோக, மதிக்கப்படுவதையே விரும்புவதாகவும் ஆய்வுகள் காட்டியுள்ளன என்பதுவே. தொடர்ந்து அவர், அந்த பிரதான தேவைகளை திருப்தி செய்வதற்கு வேதாகமம் வழிவகை செய்கிறது என்றார். ஆண்கள் தமது மனைவிகளுக்கு எதைக் கொடுக்க வேண்டுமென்று அது உத்தரவிடுகிறது? அன்பு! "புருஷர்களே உங்கள் மனைவிகளில் அன்புகூருங்கள்; அப்படியே கிறிஸ்துவும் சபையில் அன்புகூர்ந்து ... தம்மைத்தாமே அதற்காக ஒப்புக்கொடுத்தார்" என எபேசியர் 5:25 கூறுகிறது. மனைவிகள் தமது கணவன்மாருக்கு எதைக் கொடுக்க வேண்டுமென்று அது உத்தரவிடுகிறது? கீழ்ப்படிதல் அல்லது மரியாதை! (எபேசியர் 5:22-24 காண்க.) அதாவது ஒரு கணவனும் மனைவியும் வேதாகமம் உத்தரவிடுகின்ற பிரகாரமாய் ஒருவரிடத்திலொருவர் நடந்து கொள்ளுவார்களேயானால் அவர்கள் ஒருவர் மற்றொருவரது அதிமுக்கியமான தேவைகளை நிறைவேற்றுபவர்களாயிருப்பார்கள்.[4]

*அன்பிற்கான ஓர் பெண்ணின் தேவை.* ஒரு ஆண் தனது மனைவிக்கு எது மிகச்சிறந்தது என்பதையே எப்போதும் நாடுகின்ற ஓர் தன்னலமற்ற அன்பினால் அவளை நேசிக்க வேண்டும். ஒருவேளை ஒரு கணவன் அவளை நேசிப்பது எவ்வளவு முக்கியமானதோ அது போலவே, அதனை வார்த்தைகளாலும் செயல்களாலும் வெளிக்காட்டுதலும் முக்கியமானதாகும். *ஒரு மனைவியானவள் நேசிக்கப்பட வேண்டியது மட்டுமல்லாமல் நேசிக்கப்படுதாக உணர்த்தப்படவும் வேண்டியதாயிருக்கிறது.*

*மரியாதைக்கான ஓர்ஆணின் தேவை.* ஒரு பெண் தனது கணவனுக்கு மரியாதை அளிக்க வேண்டும். ஓர் ஆணும்கூட தான் நேசிக்கப்படுவதாக உணர விரும்புகிறான் - ஆனால் அனைத்திற்கும் மேலாக தான் ஆண்மையுள்ளவனென்றும் மதிப்பிற்கும் மரியாதைக்கும் உரியவன் என்றும் அறிந்து கொள்ள வேண்டிய அவசியமிருக்கிறது. திருமணமாகிவிட்டபடியினாலே ஆண்மைத்தனமான சுபாவமுறைகளெல்லாவற்றையும் விட்டுவிடும்படி கணவனை நிர்பந்திக்காமல் அவரை ஓர் ஆண்மகனாகவே இருந்திட அனுமதிப்பதின் வாயிலாக மனைவியானவள் கணவனின் இந்தத் தேவையை நிறைவாக்கிட முடியும். இத்துடன், குடும்பத்தில் தனது கணவனின் தலைமைத்துவத்தை ஏற்றுக் கொள்வதில் தனக்குள்ள மனவிருப்பத்தைக் காட்டும் வண்ணமாக மனைவி தனது கணவனை மதித்திடலாம், அன்பிற்கான தனது மனைவியின் தேவையை

திருப்திபடுத்துவதன் மூலம் ஓர் ஆண் நன்மைகளைப் பெறுவது போலவே ஒரு பெண்ணும்கூட தனது கணவனிடம் அன்பும் மரியாதையும் உள்ளவளாய் நடந்துகொள்ளும்போது அதற்கு அவர் தாராள மனதுடன் பதிற்செய்திடுவார்.

## ஆவிக்குரிய தேவைகள்

இவைகளோடு கூட, ஆணுக்கும் பெண்ணுக்கும் அவர்கள் ஒருவருக்கொருவர் நிறைவேற்றக் கூடிய ஆவிக்குரிய தேவைகள் உண்டு. எல்லாவற்றையும் விட அவர்கள் இரட்சிக்கப்பட வேண்டும், அவர்களது பாவங்களிலிருந்து மன்னிப்பு பெற வேண்டும், பரலோகம் சென்றடைய வேண்டும். பரலோகம் செல்லும் பயணத்தில் அவர்கள் சபையின் செயலாக்கமுள்ள அங்கத்தினர்களாயிருந்திட வேண்டும். சபைக்குள் ஓர் சொந்தத்தின் உணர்வு, அடையாளம், மற்றும் பயனுள்ள ஒன்றில் சம்பந்தப்பட்டிருக்கிறோம் என்ற உணர்வு ஆகியவற்றை அவர்கள் அடைந்திடலாம்.

கணவனும் மனைவியும் ஒருவரையொருவர் ஆவிக்குரிய வகையில் மேம்படுத்த/கட்டியெழுப்ப முயற்சிக்க வேண்டும். இருவரில் ஒருவர் ஒரு கிறிஸ்தவராயில்லாத பட்சத்தில் அந்த துணை மனமாற்றம் அடைய வேண்டும் என்பதையே அந்த கிறிஸ்தவ கணவனின் அல்லது மனைவியின் அதிவிருப்பமான நம்பிக்கையாயிருக்கும். அத்தகையதோர் முடிவிற்கு அந்தக் கிறிஸ்தவர் செயல்படவும் ஜெபித்திடவும் செய்வார். கணவனும் மனைவியுமாகிய இருவருமே கிறிஸ்தவர்களாயிருந்தால் அவர்கள் கர்த்தருடைய சேனையில் "உறுதியாய் நிலைத்திருக்கும்படி" ஒருரையொருவர் ஊக்கப்படுத்திடுவார்கள். கிறிஸ்தவ நற்பண்புகளை வளர்த்துக் கொள்வதற்கு ஒவ்வொருவரும் பொறுமையுடனும், அன்புடனும், மன்னிக்கும் பண்புடனும் மற்றவருக்கு உதவி செய்திடுவர். ஆண்டவருக்காக அவன் அல்லது அவளது தாலந்துகளைப் பயன்படுத்திடும்படி ஒவ்வொருவரும் மற்றவரை உற்சாகப்படுத்திடுவார்கள். அவள் அவரை பிரசங்கிக்கவோ போதிக்கவோ உற்சாகப்படுத்திடலாம் அல்லது அவரது திறமைகளை - அது எதுவாயிருந்தாலும் கர்த்தருடைய சேவையில் அவற்றைப் பயன்படுத்திட ஊக்கப்படுத்திடலாம். ஒரு உதவிக்காரர் அல்லது மூப்பரின் தகுதியாம்சங்களை அவர் வளர்த்துக்கொள்வதற்கு அவள் உறுதுணை புரிந்திடலாம். அவரோ அவள் இன்னும் அதிக உபசரிப்புள்ளவளாய் மாறுவதற்கு உதவுபவராகவும், அவர்களது வீட்டில் ஜனங்களை ஏற்றுக்கொள்வதற்கு அவளை உற்சாகப்படுத்துகிறவராகவும் இருந்திடலாம். அவர் அவளை வேதவகுப்பில் போதிப்பதற்கும் இளம் பெண்களுக்கு ஆலோசனை அளிப்பதற்கும் உற்சாகப்படுத்தலாம் அல்லது அவளது திறமைகளை - அது வீட்டுபராமரிப்பு சம்பந்தப்பட்ட திறமையோ தொழில் சம்பந்தமான நுணுக்கங்களோ, அல்லது கல்வித்துறை சாதனைகளோ, அது எதுவாயிருந்தாலும் - தேவனுடைய இராஜ்யத்தில் அவற்றைப் பயன்படுத்திட ஊக்கப்படுத்திடலாம்.

கணவனும் மனைவியும் ஒருவர் மற்றவரது ஆவிக்குரிய தேவைகளைப் பூர்த்திசெய்வதில் வெற்றிபெறுவார்களேயானால், இகத்தில் ஓர் நிறைவான, மகிழ்வான வாழ்வை மட்டுமல்ல இனிவரும் பரத்திலும் ஓர் வீட்டை பிரதிபலனாகப் பெற்றிடுவார்கள். அவர்கள் இருவருமே எல்லாரும் மீண்டும் இணைகிறதோர் மாபெரும் குடும்பக்கூடுகையை எதிர்நோக்கலாம்: அனைத்து

*யுகங்களைச் சேர்ந்த பரிசுத்தவான்கள் ஒருவரோடொருவர் கூடி மீண்டுமொரு முறை பரமபிதாவுடன் இணைந்திடுதல்.*

## *முடிவுரை*

*ஓர் ஆவிக்குரிய அஸ்திபாரத்தின்மேல் கட்டப்பட்டிருக்கும் ஒரு குடும்பத்தில், அன்புதான் கணவன் மனைவியின் நடவடிக்கைகளை நிர்ணயிக்கின்ற, முழு முடிவான கொள்கையாயிருக்கிறது. கணவனும் மனைவியுமாகிய இருவருமே ஒருவர் மற்றொருவரது தேவைகளை நிறைவேற்றுவதற்காக சுயநலமின்றி தங்களால் இயன்றதையெல்லாம் செய்கின்ற பொழுது அங்கு அன்பு தெளிவாய் காணப்படும். ஒவ்வொரு வட்டத்திலுள்ள வகையான தேவைகளும் நிறைவேற்றப்பட வேண்டும்: சரீரப்பிரகாரமான, சமூகரீதியான, உணர்வு பூர்வமான அல்லது மனோரீதியான மற்றும் ஆவிக்குரிய தேவைகள். ஒவ்வொரு பங்காளியுமே மற்றவரது தேவைகளை நிறைவேற்றுவதற்கு தங்களாலான மட்டும் பிரயாசப்பட்டால் வீடு மகிழ்ச்சிகரமாயிருக்கும். அதில் குடியிருப்போர் திருப்தியும் நிறைவும் பெறுவர், திருமணமும் நீடித்திருக்கும்.*

---

*குறிப்புகள்*

*[1]அத்தகைய பொறுப்பினை ஏற்க மனமில்லாதவர்கள் திருமணம் செய்துகொள்வதற்கு இன்னும் தயாராகவில்லை என்றே பொருளாகும். [2]உளவியல் அறிஞர்கள், மனித தேவைகளை பல்வேறு வகையாகப் பிரித்துள்ளனர். ஆபிரகாம் மாஸ்லோவ் இதுபற்றி கூறுகையில், மனிதர்களுக்கு உயிரியல் தேவைகள், பாதுகாப்பு தேவைகள், பிணைப்பு மற்றும் தொடர்பிற்கான தேவைகள், நன்மதிப்பிற்கான தேவைகள் மற்றும் தன்னிலை அறிதலின் தேவைகள் உண்டு என்கிறார்.* (Philip G. Zimbardo, Ann L. Weber, Robert L. Johnson, *Psychology - Core Concepts,* 4th ed. [New York: Allyn and Bacon, 2003], 359-60.) *இந்தப் பாடமானது மனித தேவைகளை வித்தியாசமாக தொகுத்தளித்திருக்கிறது. [3]ஆண் பெண் ஆகிய இருபாலருமே கலந்துறவாடுகிற இடமாக சபையை தேவன் அளித்திருப்பதிலிருந்து, அவர் ஜனங்களின் சமூக தேவைகளை இல்வாழ்க்கையானது முற்றிலுமாக நிறைவேற்றிவிடும் என்று அவர் உத்தேசிக்கவில்லை என்பது தெளிவாகிறது. [4]1974 ஏப்ரல் 25-26 தேதிகளில், ஆஸ்திரேலியாவின் சிட்னியில் உள்ள பிளாக் டவுன் கிறிஸ்துவின் சபையில், ஜேம்ஸ் பெய்ர்டு அவர்கள் அளித்த தொடர் பிரசங்கத்திலிருந்து.*